# எமது அழகான மலைத் தொடரும் கடலும்

இறையாசிகள் உண்டாவதாக!

அன்பான குமார், கமலா,

உங்கள் இருவரினதும் நலம் எப்படி? நாங்கள் நலமாக உள்ளோம். எமது மாமாவும், மாமியும் எங்களைப் பல இடங்களை பார்வையிட அழைத்துச் செல்கின்றார்கள். இன்று எங்கள் பயணத்தின் நான்காவது நாளாகும். இன்று நாங்கள் மலை ஏறினோம். அது புதுமையான இடம், பிரசாந் அண்ணாவும், பிரசாதினி அக்காவும் எம்முடன் இன்று பயணத்தில் இணைந்து கொண்டார்கள். மலை ஒரு இராட்சதனைப் போல் தோன்றியது. அப்படியிருந்தும் அழகாக இருந்தது. மலையுச்சியில் உயரமான மரங்களும், அழகிய பூக்களும் பூத்துக் காணப்பட்டன. செடிகளும் பலவகையில் வளர்ந்திருந்தது. சிறுபிள்ளைகளாகிய எமக்கு மலையேறுவது மிகவும் கடினமானது. பிரசாத் அண்ணாவும், மாமாவும் எனக்கு உதவி செய்தார்கள். மேலே ஏற ஏற எமக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஆண்டவர் இயேசு ஒருமுறை மலையுச்சிக்கு சென்று கடவுளுக்கு விண்ணப்பம் செய்தார் என எமது ஆசிரியர் கூறியது உனக்கு நினைவுண்டா குமார்? நாங்கள் மலையுச்சியை அடைந்தவுடன் வேண்டுதல் செய்தோம். பிரசாதினி அக்கா கடவுளுக்கு துதி செலுத்தி சிறிய விண்ணப்பம் ஒன்றை ஏறெடுத்தார். நாங்கள் துதிபாடல்கள் பாடினோம். கடவுள் படைப்பானது அழகு நிறைந்தது என எண்ணினேன்.

மலையுச்சியிலிருந்து கீழே பார்க்க எனக்குத் தோன்றியது. மிகவும் புதுமை மிக்க காட்சியைக் கண்டேன். என்னை அறியாமல் உரத்த சத்தமாகக் கத்தினேன். அமர பயப்பட வேண்டாம். அது பள்ளத்தாக்கு என்றார். பள்ளத்தாக்கின் சுற்றாடல் என்ன அழகாகக் காட்சியளித்தது என தங்கை நயனா சொன்னாள்.

குமார் அப்போது பிரசாதினி அக்கா அழகானதொரு காட்சியைக் காட்டினாள். உண்மையாகவே இள நீல நிற துணி விரித்தது போல் இருந்ததை நானும், தங்கையும் கண்டோம். அது என்னவென்று உங்களுக்கு தெரியுமா? அதுவே கடல் ஆகும். அண்ணா மிகவும் அழகுள்ளது என்று, "கடவுளுக்கு நன்றி! நன்றி!" என தங்கை விடாது கூறிக்கொண்டேயிருந்தாள். அவள் அதிகம் மகிழ்ச்சி அடைந்தாள். காற்றின் ஓசை, கடல் அலையின் மோதல் ஒலி, இடைக்கிடையே பறவைகளின் இனிய குரலோசைகள் எமக்கு கேட்டன.

இந்தப் பயணத்தின் பின்னர் நீங்கள் கண்ட அழகான காட்சிகளை சித்திரமாக வரையுங்கள் என மாமா கூறினார். அதற்கு "மலைத் தொடர்களும், கடலும் எமதே" என்ற பெயரிடுங்கள் என அண்ணா கூறினார்.

மாமி கொண்டு வந்த சுவையான உணவுகளை சாப்பிட்ட பின்னர் நாங்கள் வீட்டை நோக்கி சென்றோம்.

எனவே குமார் எமது சுற்றுலா பயணம் இப்படி முடிவடைந்தது. நாங்கள் அன்று அதிகம் மகிழ்ச்சி அடைந்தோம்.
கடவுளுக்கு நன்றி உண்டாவதாக!

இப்படிக்கு
அன்பான
அமரவும் நயனாவும்.

## செயற்பாடு

1. நீங்கள் குமார், கமலா என நினைத்து அமரவுக்கும் நயனாவுக்கும் பதில் கடிதம் எழுதுங்கள்.
2. மலையுச்சி அல்லது கடல் காட்சியை வரைக.